செ.வெ.எண்:372/2009(செமதொஅ) நாள். 30.10.2009

**மக்களின் மகிழ்ச்சியே முதல்வர் கலைஞரின் மகிழ்ச்சி - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பெருமிதம்.**

காஞ்சிபுரம் மாவட்டம் நீலங்கரை ஊராட்சியில் 6510 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழாவில் கலந்துக் கொண்ட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேசும் போது, நலத்திட்டங்களை பெறும் மக்களின் மகிழ்ச்சியே முதல்வர் கலைஞரின் மகிழ்ச்சி என்று குறிப்பிட்டார்.

நீலாங்கரையில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் விழா வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, புனிதோமையர்மலை ஒன்றியக்குழுத் தலைவர் திரு.க.ஏழுமலை, மரபுசாரா எரிசக்தி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.த.விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேசும்போது,

காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே இதுவரை இல்லாத அளவுக்கு ஒரே ஊராட்சியில் 6510 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது இங்குதான் என்பதில் பெருமை அடைகிறேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில் இதுவரை 90 சதவிகிதத்திற்கு மேல் பயனாளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 3 லட்சத்து 12 ஆயிரத்து 459 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த திட்டத்தை அறிவித்தப்பிறகு 75 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 82 லட்சத்து 15 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இந்த திட்டம் கிராமத்து மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ஊராட்சி மன்றத் தலைவர் திரு.எட்டியப்பன் நீலாங்கரை ஊராட்சியில் உள்ள அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க வேண்டுமென்று பிடிவாதமாக இருந்து வழங்கி இருக்கிறார். மூன்று முறை ஊராட்சி மன்றத் தலைவராக தேர்தெடுக்கப்பட்டதற்கு காரணம் பொதுமக்களுக்கு பிடிவாதமாக திட்டங்களை கொண்டு வந்து சேர்க்கும் திறமைதான் அனைவரும் அறிவார்கள். இதற்கு முன்பு இந்த ஊராட்சியில் 8 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களில் அரசு கிராம நத்தத்தில் குடியிருக்கும் 3000 குடும்பங்களுக்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் பட்டா வழங்கப்படவுள்ளது. இது சந்தை மதிப்பில் 250 கோடிக்கும் மேலாகும். இதுபோல் இன்னும் இரண்டு மாதங்களில் இலவச எரிவாயுடன் கூடிய அடுப்பு வழங்குவதற்கும் தயராக இருக்கிறது. எனவே, அரசு திட்டங்களை பொதுமக்கள் பெற்று பொருளாதாரத்தில் நல்ல முறையில் முன்னேற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு சலுகைகளை தொடர்ந்து வழங்கி உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்றென்றும் நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என பேசினார்.

நீலாங்கரை ஊராட்சி மன்ற தலைவர் திரு.வி.எட்டியப்பன் அனைவரையும் வரவேற்றார். இறுதியாக துணை தலைவர் திரு.அழகு நன்றி கூறினார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்